# சிலுவைப் பாடுகளின் தியானம்

**முதல்வர்:**

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்!

சிந்திய இரத்தத்தால், நம் சிந்தையில் நிறைந்தார். கல்வாரி மலை மேலே கள்வர் மத்தியில் மரித்தார். அவரது வாழ்க்கை பாதையின் உச்சக்கட்டம் சிலுவைப் பாதை. அந்தப் பாதையில், அவரை சந்தித்தவர்கள் பார்வையில் சிந்திப்போம் இயேசுவின் பாடுகளை!

**எல்லாரும்:**

இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும், இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச் சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

*திருச்சிலுவைப் பாதையின் ஒவ்வொரு தளத்தின் தொடக்கத்திலும் இறுதியிலும் கீழ்வரும் செபங்களைச் சொல்லவும்:*

**தொடக்கத்தில்:**

**முதல்வர்:**

இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி, உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கிறோம்.

**எல்லாரும்:**

ஏனெனில், உமது திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

**இறுதியில்:**

(விண்ணுலகில் இருக்கின்ற எங்கள்...; அருள்மிகப் பெற்ற மரியே....; தந்தைக்கும்)

**முதல்வர் மற்றும் எல்லாரும்:**

எங்கள்மேல் இரக்கமாயிரும், ஆண்டவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்!

**முதல்வர்:**

இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் ஆன்மாக்களும் முடிவில்லா அமைதியில் இளைப்பாறுவனவாக! ஆமென்!

**திருச்சிலுவைப் பாதை பாடல்**

பழிகளைப் சுமத்திப் பரிகசித்தார் – உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்
எனக்காக இறைவா எனக்காக
இடர்பட வந்தீர் எனக்காக

**1. இயேசு சாவுக்குக் கையளிக்கப்படுகிறார்.**

**விவிலியச் சிந்தனை (மத்தேயு 27:1–2, 22–24, 26)**

பொழுது விடிந்ததும் தலைமைக் குருக்கள், மக்களின் மூப்பர்கள் யாவரும் இயேசுவைக் கொல்ல அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர். அவரைக் கட்டி இழுத்துச் சென்று ஆளுநன் பிலாத்திடம் ஒப்புவித்தனர். பிலாத்து அவர்களிடம், “அப்படியானால் மெசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டான். அனைவரும், “சிலுவையில் அறையும்” என்று பதிலளித்தனர். அதற்கு அவன், “இவன் செய்த குற்றம் என்ன?” என்று கேட்டான். அவர்களோ, “சிலுவையில் அறையும்” என்று இன்னும் உரக்கக் கத்தினார்கள். பிலாத்து தன் முயற்சியால் பயனேதும் ஏற்படவில்லை, மாறாகக் கலகமே உருவாகிறது என்று கண்டு, கூட்டத்தினரின் முன்னிலையில் தண்ணீரை எடுத்து, “இவனது இரத்தப்பழியில் எனக்குப் பங்கில்லை. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்” என்று கூறித் தன்

கைகளைக் கழுவினான். அப்போது அவன் பரபாவை அவர்கள் விருப்பத்திற்கிணங்க விடுதலை செய்தான்; இயேசுவைக் கசையால் அடித்துச் சிலுவையில் அறையுமாறு ஒப்புவித்தான்.

**பிலாத்துவின் வார்த்தைகளில்...**

என்னுடையது மனது இளகியது அன்று. கள்வர்களை, கலகக்காரர்களை கசையடிக்கு கையளிக்குமுன் கணபொழுதும் சிந்தித்ததில்லை. கொலைக்காரர்களை, தீவிரவாதிகளை சிலுவை சாவிற்குத் தீர்ப்பிட சிறிதளவும் தயங்கியதில்லை.

ஆனால்,

இவரை கண்டதும் என் இருகிய மனதும் இளகியதே. யூதரின் அரசராம் இவர்! அடிமைப்படுத்துபவனே அரசன் என்றிருந்த நான், அரைகுறை ஆடையில் அடிப்பட்டு நொடிந்து நிற்கும் அரசனைப் பார்க்கிறேன்.

ஓலமிடும் ஓநாய்கள் நடுவில், செம்மறி ஆடாய் நின்றாலும், இவர் முகத்தில் பயமேதும் இல்லையே. பார்த்தியோனின் கடவுள்களை வணங்கும் நாங்கள், வெளியில், சட்டமும் சாட்டையும் ஏந்தி, அதிகாரமும் அகங்காரமும் கொண்டு அலைகிறோம்! உள்ளுக்குள் நடுநடுங்கி குழம்பி தவிக்கிறோம். உண்மையை உறைக்க வந்தவராம். உண்மையை உணர முயல்கிறேன். கடவுளின் மகனாம் இவர். அவரது கடவுளை அறிய விழைகிறேன். தவறேதும் காணவில்லை இவரிடம். ஆனால், தவறான தீர்ப்பளிக்க தள்ளப்பட்டேன்! கைகழுவி இவரை சாவிற்குக் கையளிக்கத் தயாராகி விட்டேன். சிம்மாசனத்தில் அமர்ந்து, ஒரு சிறுநரியாய் சிங்கத்திற்குத் தீர்ப்பு வழங்குவது போல் உணர்கிறேன்!

**செபம்:**

எங்கள் அன்பு இயேசுவே, நீர் சாவை எந்த பயமுமின்றி எதிர்நோக்கினீர். இன்று பல விதமான பயத்துடன் வாழும் மக்களுக்கு நீரே தைரியம் தந்தருளும். இவ்வுலகில் சித்திரவதைப்படுவோர் மற்றும் அநியாயமாக நடத்தப்படுவோருடன் நீர் இருந்து அவர்களுக்கு ஆறுதல் தந்தருளும்.

**எல்லாரும்:**

எங்கள் அன்பு இயேசுவே! யாதொரு குற்றமோ பாவமோ அறியாத உம்மைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். வாழ்வும், வழியும், உண்மையுமான உம்மையே நாங்கள் பின்பற்றவும், தவறான தீர்ப்பு வழங்காதிருக்கவும் எங்களுக்கு அருள்தாரும். ஆமென்!

தாளாச் சிலுவையைச் சுமக்க வைத்தார் – உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்.

## 2. இயேசுவின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.

### விவிலியச் சிந்தனை (மத்தேயு 27:27–31)

ஆளுநனின் படைவீரர் இயேசுவை ஆளுநன் மாளிகைக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்த படைப்பிரிவினர் அனைவரையும் அவர்முன் ஒன்று கூட்டினர்; அவருடைய ஆடைகளை உரித்து, கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்தனர். அவர்கள் ஒரு முள்முடி பின்னி அவரது தலையின்மேல் வைத்து, அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர்முன் முழந்தாட்படியிட்டு, "யூதரின் அரசரே, வாழ்க!" என்று சொல்லி ஏளனம் செய்தனர்; அவர்மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர்; அவரை ஏளனம் செய்தபின், அவர்மேல் இருந்த தளர் அங்கியைக் கழற்றிவிட்டு, அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் சென்றனர்.

**இயேசு பார்வையளித்த ஒருவனின் வார்த்தைகளில்...**

இரத்தம் சிந்தும் அவரின் தோள்களில் கணமான சிலுவையை சாய்த்தார்கள் கொலையை ஒரு விளையாட்டாய் கருதும் உரோமையர்கள்! பார்வையின்றி பரிதவித்த பாவி நான்! இருண்ட என் வாழ்வில் கருணையின் வடிவம் நீ, நீங்கா ஒளி தந்தாய்! இங்கு இருள் சூழுதையா எங்கள் வாழ்வின் ஒளி நீ எங்கு செல்கின்றாய்!

பார்வை தந்த உந்தன், பாடுகளை பார்க்க முடியாமல் தவிக்கிறேன்! எத்தனை புதுமைகள்! எத்தனை உவமைகள்! எத்தனை எத்தனை நம்பிக்கை அளிக்கும் நல்மொழிகள்! அத்தனையும், தந்தளித்தது எங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவே!

ஆனால் இங்கோ,

பாரச் சிலுவை, பாவச் சிலுவை, திருமகன் உன் தோள்களில், திருச்சிலுவையாக மாறும் நியாயமற்ற நிலையைக் காண்கிறேன்!

**செபம்:**

எங்கள் அன்பு இறைவா!

அக்கிரமத்தையும், அநீதியையும் எங்கள் நடுவில் பார்க்கும்போது, பயந்து, தடுக்க எந்த முயற்சியும் செய்யாது, எங்கள் மகிழ்ச்சி முக்கியமென மற்றவர்களைப் புறக்கணிக்கிறோம். எங்களின் கடின மனதை மன்னித்து, மனமாற்றம் தந்தருளும்!

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! உம்மேல் சுமத்தப்பட்ட சிலுவை எங்கள் பாவங்களின் விளைவு என்பதை உணர்கின்றோம். யார் மீதும் அநியாயமாகப் பழி சுமத்தாமல் இருக்கவும், எங்கள் வாழ்வில் வருகின்ற துன்பங்கள் என்னும் சிலுவையைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்தாரும். ஆமென்!

விழுந்தீர் சிலுவைப் பளுவோடு – மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு

## 3. இயேசு முதல் முறை கீழே விழுகிறார்.

**விவிலியச் சிந்தனை (புலம்பல் 1:14, 16–17)**

என் குற்றங்கள் என்னும் நுகம் அவர் கையால் பூட்டப்பட்டுள்ளது; அவை பிணைக்கப்பட்டு, என் கழுத்தைச் சுற்றிக் கொண்டன; அவர் என் வலிமையைக் குன்றச் செய்தார்; நான் எழ இயலாதவாறு என் தலைவர் என்னை அவர்கள் கையில் ஒப்புவித்தார். இவற்றின் பொருட்டு நான் புலம்புகின்றேன்; என் இரு கண்களும் கண்ணீரைப் பொழிகின்றன; என் உயிரைக் காத்து ஆறுதல் அளிப்பவர் எனக்கு வெகு தொலையில் உள்ளார்; பகைவன் வெற்றி கொண்டதால் என் பிள்ளைகள் பாழாய்ப் போயினர். சீயோன் தன் கைகளை உயர்த்துகின்றாள்; அவளைத் தேற்றுவார் யாருமில்லை; சூழ்ந்து வாழ்வோர் யாக்கோபுக்கு எதிரிகளாயிருக்குமாறு ஆண்டவர் கட்டளையிட்டார்; எருசலேம் அவர்களிடையே தீட்டுப்பொருள் ஆயிற்று.

**செபதேயுவின் மகன் புனித யாக்கோபு வார்த்தைகளில்...**

என் இறைவன் இடறி விழ, என் இதயம் குமுறி அழ, செயலிழந்து நின்றேன் நான், செபதேயுவின் மகன் யாக்கோபு!

மலை மேல் அழைத்து சென்று, மலைத்துப் போய் நாங்கள் நிற்க, உருமாறி கதிரவன் போல ஒளிர்ந்த என் இறைவன், நிலைத் தடுமாறி விழுவது முறையா! தோட்டத்தில் நீர் இரத்த வேர்வை வேர்க்க, தலைசாய்ந்தோம் கண் அயர்ந்து.

இக்கூட்டத்தில் கொடிய சிலுவை சுமக்க, தலை மறைந்தோம் உயிர் பயந்து. தூக்கிவிட யாருமின்றி எழுந்தாய் இறைமகன், நீ இன்று! தூக்கி–ட்டாலும் பறைசாற்றுவேன் துணிவாய் என் இறைவன், நீ என்று!

**செபம்:**

எங்கள் அன்பு இறைவா!
நாங்கள் உமது அன்பின் பாதையைவிட்டு
இடறிவிழும் ஒவ்வொரு முறையும்,
உம் அன்பினால் எழச்செய்து, உமை நோக்கி
வர வரம் தந்தருளும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! சிலுவையின் பாரத்தால் நீர் முகம் குப்புறக் கீழே விழுந்தீர். துன்ப துயரங்களின் சுமையால் வாடுகின்ற மக்களைக் கனிவோடு கண்ணோக்கிட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

> தாங்கிட வொண்ணாத் துயருற்றே – உம்மைத்
> தாங்கிய அன்னைத் துயருற்றாள்.

**4. இயேசு தம் தாயைச் சந்திக்கிறார்.**

**விவிலியச் சிந்தனை (புலம்பல் 2:13, 15, 18)**

மகளே! எருசலேம்! உன் சார்பாக நான் என்ன சொல்வேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? மகள் சீயோனே! கன்னிப் பெண்ணே! யாருக்கு உன்னை இணையாக்கித் தேற்றுவேன் உன்னை? உன் காயம் கடலைப்போல் விரிந்துள்ளதே! உன்னைக் குணமாக்க யாரால் முடியும்? அவ்வழியாய்க் கடந்து செல்வோர் உன்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தனர்! மகள் எருசலேமை நோக்கித் தலையை ஆட்டிச் சீழ்க்கையடித்தனர்! "அழகின் நிறைவும் மண்ணுலகின் மகிழ்ச்சியுமாக இருந்த மாநகர் இதுதானா?" என்றனர். அவர்களின் இதயம் என் தலைவனை நோக்கிக் கூக்குரலிடுகின்றது; மகள் சீயோனின் மதிலே! இரவும் பகலும் வெள்ளமெனக் கண்ணீர் பொழி! உனக்கு ஓய்வு வேண்டாம்! கண்ணீர் விடாமல் நீ இருக்க வேண்டாம்!

**அன்னை மரியின் வார்த்தைகளில்...**

என் மகன் காலில் சிறு முள் தைத்தாலும், பதைபதைக்கும் என் மனது. இன்று முள்முடி சூடி முகமெல்லாம் இரணமாய்! ஏன் விடிந்தது இந்த பொழுது.

பன்னிரண்டு வயதில் அவன் காணாமல் போக, கண்ணிரண்டிலும் கண்ணீரும் கவலையும் கண்டெடுக்கும் வரை ஓயவில்லை.

ஆனால்!

இன்று கண்டெடுத்தேன் இக்கோலத்தில். கண்கள் இருண்டன! கால்கள் துவண்டன! கண்ணீரும் இக்காட்சியைக் காணப் பொறுக்காமல் வற்றிப் போய் வர மறுத்தது!

"உன் இதயத்தை ஒரு வாள் ஊடுறுவும்" என சிமியோன் சொன்னது, தெளிவாய் ஞாபகம் உள்ளது. என் இதயத்தை ஒரு வாள் அல்ல, ஓராயிரம் வாட்கள் ஊடுறுவ உணர்ந்தேன். தேற்றுதல் தர அவர் முகத்தை பார்த்தேன்! அந்த இரணமான முகத்தின் தெளிவான அமைதி எனைத் தேற்றியது!

**செபம்:**

எங்கள் அன்பு அன்னையே!
உமது இதயம் துயரால் பதற
உமது மைந்தனின் சிலுவைப் பாதையில்
அருகிருந்து ஆறுதல் அளித்தீர்.
எங்கள் வாழ்க்கையின் சுமைகளை
நாங்கள் சுமக்கையில்
அருகிருந்து ஆறுதல் அருள்வாய் அம்மா!

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! உம்மை ஈன்றெடுத்த அன்னை மரியா உம் துன்பங்களைக் கண்டு மனமுடைந்தார். அந்த அன்னையின் அரவணைப்பில் நாங்கள் என்றும் மகிழ்வுகொள்ள அருள்வீராக. ஆமென்!

> மறுத்திட முடியா நிலையாலே – சீமோன்
> வருத்தினார் தன்னை உம்மோடு

## 5. இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவி செய்கிறார்.

### விவிலியச் சிந்தனை

அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்று கொண்டிருந்தபோது சிரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப்பின் அதைச் சுமந்து கொண்டுபோகச் செய்தார்கள். (லூக்கா 23:26)

பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” என்றார். (மத்தேயு 16:24)

இயேசு, “நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது” என்றார். (மத்தேயு 11:29–30)

### சீரேனே ஊரனாகிய சீமோனின் வார்த்தைகளில்...

சீரேனே ஊரானாகிய நான் சிறியவன் அல்லன், பார்வைக்கு மிக பெரியவன்! உழுது முடித்து, நான் ஊர் பார்த்துச் செல்ல, வழியில் புழுதி கிளப்பி போனது ஒரு கூட்டம்.

ஆர்வத்தில் அருகில் சென்றேன்! பரிதவித்து நிற்கும் பெண்கள், சீற்றம் கொண்ட சிப்பாய்கள் நடுவில், சோர்ந்த ஒரு மனிதன்! அவர் தோளில் பாரச் சிலுவை! அவர் துவண்டு விழுமுன் என்னைத் தோள்கொடுக்க ஆணையிட்டார்கள் ஆணவக்காரர்கள்! அவமானத்துடன் அடிப்பணிந்தேன்!

ஆனால்!

அறியவில்லை அன்று! அது அரிதாய் கிடைத்த விருதென்று!

### செபம்:

எங்கள் அன்பு இயேசுவே! உமது பாரச் சிலுவையைச் சுமக்கும் பாக்கியத்தைச் சீமோனுக்கு அளித்தீர். பிறரின் சுமைகளை நாங்கள் பகிர்ந்துக்கொள்ள தொண்டுள்ளம் தந்தருளும்.

### எல்லாரும்:

அன்பு இயேசுவே! கடின சிலுவையை நீர் சுமந்து செல்ல சீமோன் என்பவர் துணைசெய்தார். எங்கள் சகோதரர் சகோதரிகளின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு, அவர்களின் சிலுவைப் பாரத்தைக் குறைத்திட எங்களுக்குத் துணை செய்வீராக. ஆமென்!

நிலையாய்ப் பதிந்தது உம் வதனம் – அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில்

## 6. வெரோணிக்கா இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறார்.

### விவிலியச் சிந்தனை (மத்தேயு 25:37–40)

அதற்கு நேர்மையாளர்கள் “ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?” என்று கேட்பார்கள். அதற்கு அரசர், “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்” எனப் பதிலளிப்பார்.

### வெரோனிக்கம்மாளின் வார்த்தைகளில்...

கண்ணீருடன் வரும் என் குழந்தையின் முகத்தைக் கவலையுடன் துடைத்திருக்கிறேன். களைத்துப்போய் வரும் கணவனின் முகத்தைக் கனிவுடன் நான் துடைத்திருக்கிறேன்.

கனவிலும் நினைக்கவில்லை! என் கடவுளின் முகத்தை துடைப்பேன் என. கொடிய தீர்ப்பின் துயரம் தாக்க தொடர்ந்தேன் என் தேவனின் பாதையில் பல பெண்களுடன்!

அந்த அழுது புலம்பும் பெண்கள் நடுவில், அமைதி சொரூபமாய் அவரது அன்னை! இயேசுவை அருகில் கண்டு வந்ததில் கண்ட அமைதியோ அலாதியானது.

சிப்பாய்களையும் தாண்டி இயேசுவின் முகம் லேசாய் தெரிய, புண்பட்ட அவர் முகத்தில் புழுதியும் இரத்த சகதியும் கண்டேன்.

"துயருற்றோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்" அவர் திருவாய் மலர்ந்த வார்த்தைகள் தெளிவாய் என் மனதில்!

சீறும் சிப்பாய்களைத் தாண்டி சென்றேன் என் இயேசுவிடம்! எனது துணியால் அவரது முகத்தைத் துடைக்க, அன்னையிடம் கண்ட அதே அமைதி அவர் முகத்திலும். காவலர்கள் தள்ளிவிட விழுந்தேன்!

ஆனால்

ஒன்று உணர்ந்தேன்!

உண்மையில் துயருற்றது நான் தான்! ஆறுதல் அளித்தது அவரது முகம்! அவர் முகம் பதிந்த துணியில். அதே துணியில் முகம் புதைந்து அழுகின்றேன்!

**செபம்:**

எங்கள் அன்பு இயேசுவே!
இந்தத் தருணத்தில், பொதுநலம் கருதுவோரையும்
மற்றவரின் கண்ணீரை துடைப்பவரையும் நினைவு கூறுகின்றோம்.
தாழ்ந்தவர்களை அவமதித்ததற்காகவும்,
எங்களுக்காகப் பாடுபட்டவர்களை மறந்தததற்காகவும்,
எங்களை மன்னிக்க வேண்டுகிறோம்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! வியர்வையாலும் இரத்தத்தாலும் கறைபட்ட உம் திருமுகத்தை ஒரு பெண்மணி அன்போடு துடைத்து உமக்கு ஆறுதலளித்தார். எங்கள் வீட்டிலும் நாட்டிலும் உலகிலும் கவலையால் வாடுவோரின் துன்பங்களையும் துடைத்திட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததினால் – அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்.

## 7. இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

### விவிலியச் சிந்தனை (எசாயா 53:3–6)

அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார்; நோயுற்று நலிந்தார். காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார்; அவர் இழிவுபடுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை. மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்; நாமோ அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர் என்றும் சிறுமைப்படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம். அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். ஆடுகளைப் போல நாம் அனைவரும் வழி தவறி அலைந்தோம்; நாம் எல்லாரும் நம் வழியே நடந்தோம்; ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார்.

### புனித பேதுருவின் வார்த்தைகளில்...

ஒரு முறை, இரு முறை அல்ல, உம்மை மும்முறை மறுதரித்தவன் நான்! உம்மோடு தண்ணீரில் நடந்தவன், இன்று கண்ணீரில் மிதக்கிறேன்!

என் பாதத்தை நீர் கழுவ நான் மறுக்க, உம்மோடு பங்கில்லை என்று நீர் சொன்னவுடன் பாதத்தைக் கொடுத்தேனே! பாரச் சிலுவை சுமந்து, நடந்த உம் பாதங்கள் நோகுதையா

பாவி நான், உம் துயரத்தில் பங்கெடுக்க பயந்தேனே! பாரம் தாங்காமல் பாதையில் விழுகின்றீர்!

ஆனாலும்!

நீர் இளைப்பாற, உமது பாதையில், ஒரு பாறையாய் நான் இருக்க விழைகின்றேன்.

**செபம்:**

எங்கள் அன்பு இயேசுவே!
பவீனமான எங்களுக்கு,
அன்றாட வாழ்வின் சிலுவைகளைச்
சுமக்கவும், தவறி விழுந்தாலும் திரும்ப
எழுந்து நடக்கவும், பலத்தைத் தந்தருளும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! சிலுவையின் பாரம் உம் தோள்களை அழுத்தியதால் நீர் மீண்டும் ஒருமுறை கீழே விழுந்தீர். ஆனால் மன உறுதியோடு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தீர். நாங்களும் ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்டு துவழ்ந்து விடாமல் துணிந்து எழுந்து, உம்மேல் நம்பிக்கை வைத்து முன்னேறிச் சென்றிட அருள்வீராக. ஆமென்!

விழிநீர் பெருக்கிய மகளிருக்கு – அன்பு
மொழி நீர் நல்கி வழி தொடர்ந்தீர்

## 8. எருசலேம் மகளிருக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்.

**விவிலியச் சிந்தனை (லூக்கா 23:27–28)**

பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" என்றார்.

**எருசலேம் பெண்களின் வார்த்தைகளில்...**

அன்பர் இயேசுவின் அருள் மொழிகள், எங்கள் அடிமை வாழ்வின் ஆத்ம சுதந்திரம்.
இது, அவரின் சிலுவைப் பாதையின் கடைசிப் படிகள், எங்களுக்கு மிஞ்சியதோ அழுகையும் புலம்பலும் மட்டுமே!

இயேசுவின் கடைசி பார்வைக்காக காத்திருந்த வேளையில் அவரின் கடைசி வார்த்தைகளைக் கேட்டோம்!

"அழாதீர்கள் எனக்காக! அழுங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக" என்றார்! அவரின் வார்த்தையில் ஒரு ஆதங்கம் இருந்தது. தீர்வு நாளின் நிகழ்வுகளுக்கு எங்களை ஆயத்தம் செய்யும் வார்த்தைகள்! மனம் வருந்தி மனமாற்றம் பெற அழைப்பு விடும் வார்த்தைகள்!

ஆனால்!

அவரின் வார்த்தைகள் எங்களை ஆழமாய் தைத்தன!

உண்மையில் மிஞ்சியது, அழுகையும் புலம்பலும் அல்ல! மனுமகனின் மாறாத அன்பும் மீட்பின் நம்பிக்கையுமே.

**செபம்:**

ஆறுதலின் ஆண்டவரே!
இன்று உலகில், போரால், இறப்பால், இழப்பால்
துயரப்படும் அனைவருக்காகவும் வேண்டுகிறோம்.
அவர்களை நீரே உமது அன்பால் ஆறுதல்படுத்தியருளும்.
உமது எடுத்துக்காட்டைப் பின்பற்றி நாங்களும்
அன்பையும் ஆறுதலையும் பரப்ப அருள் புரியும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! உமக்கு நேர்ந்த சொல்லற்கரிய துன்பத்தையும் பாராமல் நீர் பிறருக்கு ஆறுதல் கூறினீர். தன்னலம் பாராது பிறர்நலம் நோக்கவும், துன்புறுவோருக்கு ஆறுதல் கூறவும் எங்களுக்கு நல்மனத்தைத் தந்து, தூய வழியில் நாங்கள் நடந்திட அருள்வீராக. ஆமென்!

மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் – கால்
ஊன்றி நடந்திட மெய் நொந்தீர்

## 9. இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்.

**விவிலியச் சிந்தனை (திருப்பாடல்கள் 22:1; 40:11–13)**

இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்னைக் காப்பாற்றாமலும், நான் தேம்பிச் சொல்வதைக் கேளாமலும் ஏன் வெகு தொலையில் இருக்கின்றீர்?... ஆண்டவரே, உமது பேரிரக்கத்தை எனக்குக் காட்ட மறுக்காதேயும்; உமது பேரன்பும் உண்மையும் தொடர்ந்து என்னைப் பாதுகாப்பனவாக! ஏனெனில் எண்ணிறந்த தீமைகள் எனைச் சூழ்ந்து கொண்டன; என் குற்றங்கள் என்மீது கவிந்து என் பார்வையை மறைத்துக்கொண்டன. அவை என் தலைமுடிகளைவிட மிகுதியானவை; என் உள்ளம் தளர்ந்து என்னைக் கைவிட்டது. ஆண்டவரே, என்னை விடுவிக்க மனமிசைந்தருளும்; ஆண்டவரே, எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்.

**யூதாஸ் ஸ்காரியோத்துவின் வார்த்தைகளில்...**

ரோமரின் இராச்சியத்தை முடிவுகட்டும் மெசியாவாக உமை நான் எண்ணினேன்! நான் நினைத்த மெசியா, நீரில்லை என நினைந்து, யூதக் குருக்களின் வெள்ளிக் காசுக்கு இரையானேன்! கடைசி இரவுணவில், என்னை நீர் கண்டறிந்தும் என் கண்கள் திறக்கவில்லை!

கன்னத்தில் முத்தமிட்டு காட்டிக் கொடுத்தேன்! கலகக்காரன் நான், இன்று கலங்கிப் போய் நிற்கிறேன்! ஒவ்வொரு முறை நீர் விழும் போதும் "பணிவிடை பெறுவதற்கன்று; பணிவிடை புரியவே வந்தேன்" என்ற உமது தாழ்மையான வார்த்தைகள், நினைவிற்கு வர தாழ்ந்து தலை குனிந்தேன்!

ஆனால்!

சிலுவையின் சுமை உமை சாய்க்க பாவ சுமை எனை அழுத்தியது. மன்னிப்பின் மன்னவனே! என்னை மன்னிக்க எனக்கு தெரியவில்லை. வாழ்க்கையிலிருந்து விடைபெறுகிறேன்!

**செபம்:**

எங்கள் அன்பு இயேசுவே!
நீர் சிலுவை சுமந்து, பலமுறை விழுந்து
தாழ்மையுடன் இவ்வுலகத்தை பாவ
தாழ்நிலையிரிருந்து மீட்டீர்.
நாங்கள் மீண்டும் மீண்டும்
பாவசகதியில் விழாமல் காத்தருளும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! மீண்டும் மீண்டும் கீழே விழுந்ததால் உம் உடல் எல்லாம் இரத்தமயமாயிற்று. எங்கள் பாவங்களுக்காக நீர் நொறுக்கப்பட்டீர். எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் நாங்கள் தூய்மையோடு வாழவும், பாவத்தை வெறுத்து, உம் அன்பில் எந்நாளும் வளரவும் எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

உடைகள் களைந்திட உமை தந்தீர் – ரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்

## 10. இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன.

### விவிலியச் சிந்தனை (யோவான் 19:23–24)

இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, “அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்கும் கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்” என்றார்கள். “என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப் போட்டார்கள்” என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது.

### இயேசுவின் பிறப்பை வானதூதர் வழியாகக் கேட்ட ஒரு இடையன் வார்த்தைகளில்...

பெத்தலகேம் ஊரின் இடையன் நான்! இளைஞனாய் இருந்தபோது இயேசு சிறு குழந்தையாய் தீவணத்தொட்டியே தொட்டிலாய் படுத்திருக்கப் பார்த்தவன் நான்! வானதூதர் அறிவித்த மீட்பரின் எளிமையை எண்ணி வியந்தவன் நான்!

அவரது பாதையில் பல நாள் தொடர்ந்திருக்கிறேன்! சிலுவைப் பாதையும் சேர்த்து!

நல்ல மேய்ப்பன் நானே என்றுரைத்த நாதா! இன்று தொலைந்துப் போன ஆடாய் தொலைவிரிருந்து உமைப் பார்க்கிறேன்! உமது ஆடைகளைக் களைகிறார்கள்! பச்சிளம் குழந்தையாய் உமைப் பார்த்தக் கண்கள், காண மறுக்கின்றன உமது காய்ந்தப் புண்கள் மீண்டும் இரணமாவதை!

களைந்து எடுத்த மேலாடையை கிழித்தெடுத்துப் பிரித்தனர் கல் நெஞ்சக்காரர்கள்!
ஆனால்!
களைத்து நீர் சாய்ந்திருக்க, இடையன் நான் வான் பார்த்து காத்திருக்கிறேன்,
வானத்தூதருக்காக!

**செபம்:**

இரக்கமே உருவான இறைவா!
இந்நாளில், வேலையிடத்தில், வீட்டில், வெளியிடத்தில்,
அவமானப்படுத்தப்படுவோருக்காக வேண்டுகிறோம்!
நாங்களும் மற்றவர் மனம் நோகும்படி
நடக்காமல் இருக்க அருள் புரியும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! உம் உடைகளைக் களைந்தவர்கள் உம்மை அவமானத்திற்கு உள்ளாக்கினார்கள். வறுமை, அரசியல் அடக்குமுறை, அதிகாரப்பாணி போன்ற அவலங்களால் மனித உரிமையும் மாண்பும் உரியப்பட்டு நிர்வாணமாக்கப்படுகின்ற எம் சகோதரர் சகோதரியரை நினைத்துப் பார்க்கின்றோம். உம் உடன் பிறப்புகளாகிய அவர்களது மாண்பினைக் காத்துப் போற்றிட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

பொங்கிய உதிரம் வடிந்திடவே – உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே

## 11. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்.

### விவிலியச் சிந்தனை (யோவான் 19:16–19,25)

அப்போது பிலாத்து அவரைச் சிலுவையில் அறையுமாறு அவர்களிடம் ஒப்புவித்தான். அவர்கள் இயேசுவைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு “மண்டை ஓட்டு இடம்” என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் “கொல்கொதா” என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்; அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் “நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்” என்று எழுதியிருந்தது. சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்றுகொண்டிருந்தனர்.

**ஆணி அறைந்தவனின் வார்த்தைகளில்...**

அடிப்பணிய மறுக்கும் அடிமைகளையும், சட்டம் மீறும் குற்றவாளிகளையும், அவர்கள் கண்கள் நோக்காமல், கடின மனத்தோடு, சிலுவையில் அறைவது எனது பணி!

இரு திருடர்களை அறைந்த களைப்பில், நான் இளைப்பார, அழைத்து வந்தார்கள் அந்த இளைஞனை! ஆணியை அறையும் முன் கேட்டது அவரின் வார்த்தைகள்,
"நினைவில் கொள் உன் செயலை நான் மன்னித்தேன் என!"
ஏசும் கைதிகளைக் கண்டுப் பழகிப் போன எனக்கு இயேசுவின் வார்த்தைகள் இதயத்தில் ஆணியாய் இறங்கின!

ஆணைப்படி அறைந்தோம் ஆணிகளை. அவர் கைகளிலும் கால்களிலும்! எலும்பையும் சதையையும் பிய்த்துக்கொண்டு அவை இறங்கின!!

ஆனால்!
அவர் கண்களை முதல்முறையாகப் பார்த்தேன்
அப்போதும் கண்களில் மன்னிப்பு தெரிந்தது!

**செபம்:**

ஓ நல்ல இயேசுவே!
எங்களில் பலர் தங்களின் பண வலிமையால், அல்லது பண வறுமையால்
வார்த்தைகளால் எத்தனையோ பேருக்கு துயரம்
விளைவித்திருக்கிறோம்.
நீர் சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்து,
எம்மையும் மன்னித்து
புது வாழ்வு பெற அருள்புரிந்தருளும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! சிலுவையில் நீர் அறையப்பட்டபோது உம் கைகளையும் கால்களையும் ஆணிகளால் துளைத்தார்கள். உம் திருக்காயங்களால் நீர் எங்கள் காயங்களைக் குணமாக்கினீர். நீர் சிந்திய இரத்தத்தால் நாங்கள் கழுவப்பட்டுள்ளோம். அவமானச் சின்னமாகிய சிலுவையை நீர் மீட்பின் கருவியாக்கியதுபோல நாங்களும் எங்கள் துன்பத்துயரங்களை உம் சிலுவையோடு இணைத்து உம் மீட்பின் பலன்களை இடைவிடாது துய்த்து அனுபவித்திட எங்களுக்கு அருள்வீராக. ஆமென்!

> இன்னுயிர் அகன்றது உமைவிட்டு – பூமி
> இருளினில் ஆழ்ந்தது ஒளிக் கெட்டு

**12. இயேசு சிலுவையில் உயிர் துறக்கின்றார்.**

**விவிலியச் சிந்தனை (மத்தேயு 27:45–46, 50, 54)**

நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. மூன்று மணியளவில் இயேசு, "ஏலி, ஏலி லெமா சபக்தானி!" அதாவது, "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்று உரத்த குரலில் கத்தினார். இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார். நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்த யாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சி, "இவர் உண்மையாகவே இறைமகன்" என்றார்கள்.

**இயற்கையின் வார்த்தைகளில்...**

கதிரவன் இக்காட்சியை காணப் பொருக்காமல் கருப்புப் போர்வையில் மறைய, வானம் இருண்டது! காற்றும், இருண்ட இவ்வுலகில் இருக்கப் பயந்து வேகமாய் எங்கோ விரைந்தது! பூமியும் துயர சுமை தாங்க முடியாமல், பூகம்பமாய் பிளந்தது! கோயில் திரை கிளிந்தது! கடல் கொந்தளித்தது!

"என் தந்தையே! என் தந்தையே! ஏன் என்னைக் கைவிட்டீர்!" கடவுளின் மகனின் கடைசி வார்த்தைகள் வானில் எதிரொலிக்க, இயற்கையாகிய நான், இயலாமல் நிற்க, இறுதி மூச்சை இறைமகன் இயேசு விட்டார்!

**செபம்:**

சிலுவையில் மரித்த இயேசுவே!
உமது கடைசி மூச்சில் கூட இந்த மனிதக் குலத்தை
மறக்காமல், உமது தந்தையைக் கருணையுடன்
மன்னிக்கும்படி கேட்டீர்.
எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் உமது
அன்பின் ஆவியால் நிரப்பி வாழ்விலும் சாவிலும்
உமது திருப்பெயரைப் பறைசாற்ற அருள் புரியும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! வானத்திற்கும் பூமிக்கும் இடையே நீர் சிலுவையில் தொங்கினீர். மனிதரைக் கடவுளின் பிள்ளைகளாக்கிட நீர் எம்மில் ஒருவராக மாறினீர். சிலுவையில் தொங்கியபோது நீர் உரைத்த சொற்களை நினைத்துப் பார்க்கிறோம். “தாகமாயிருக்கிறது” என்று கூறிய இயேசுவே, எங்களின் ஆன்ம தாகத்தை வளர்த்தருளும். “எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி உயிர்நீத்த இயேசுவே, நாங்கள் கடவுளின் திருவுளத்தை இறுதிவரை நிலைத்துநின்று நிறைவேற்றிட அருள்தாரும். ஆமென்!

துயருற்றுத் துடித்தார் உளம் நொந்து – அன்னை
உயிரற்ற உடலினை மடி சுமந்து

**13. இயேசுவைச் சிலுவையிலிருந்து கீழே இறக்குகிறார்கள்.**

**விவிலியச் சிந்தனை (யோவான் 19:38–40)**

அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இயேசுவின் சீடர்களுள் ஒருவர்; யூதருக்கு அஞ்சியதால் தம்மைச் சீடர் என்று வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாதவர். அவர் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டுபோகப் பிலாத்திடம் அனுமதி கேட்டார். பிலாத்தும் அனுமதி கொடுத்தான். யோசேப்பு வந்து இயேசுவின் சடலத்தை எடுத்துக்கொண்டு போனார். முன்பு ஒருமுறை இரவில் இயேசுவிடம் வந்த நிக்கதேம் என்பவரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வெள்ளைப்போளமும் சந்தனத் தூளும் கலந்து ஏறக்குறைய முப்பது கிலோ கிராம் கொண்டுவந்தார். அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டினார்கள்.

**இயேசுவின் அன்பு சீடர் யோவானின் வார்த்தைகளில்...**

“இதோ உன் தாய், இதோ உன் மகன்” என உரைத்து புது உறவை உருவாக்கி உயிர் விட்டார் என் இறைவன்! உயிர் கொடுத்த அன்னையின் மடியில், உயிரற்ற மகனின் உடல்! தாலாட்டு பாடிய தாய் இன்று, தாளாத துயரத்தில்!

அன்று கபிரியேல் சொன்ன செய்தியை தயங்காமல் ஏற்றுக் கொண்டாள். இன்று ஆறாத வேதனையும் அமைதியாய் தாங்கிக் கொண்டாள்!

ஆனால்!
இந்த அன்னைக்கு நான் மகனானது, மகத்தான பரிசன்றோ!

**செபம்:**
அன்பு அன்னையே!
விசுவாசம், நம்பிக்கை, பரிவு ஆகிய அருள்வரங்கள்
எங்களிடம் நிறைய, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
உமது எடுத்துக்காட்டை பின்பற்றி நாங்களும் சிலுவையின்
அடியில் கடைசிவரை நிற்க எங்களுக்கு திடத்தையும்
பக்தியையும் தந்தருள திருமகனிடம் வேண்டிக்கொள்ளும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! உயிரற்ற உம் சடலத்தை உம் அன்னை மரியா தம் மடியில் கிடத்தி அழுது புலம்பினார். அவரை எங்களுக்கு அன்னையாக அளித்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்கள்மேல் கொண்ட எல்லையற்ற அன்பினால் நீர் எங்களுக்காக உயிர்துறந்தீர். உமது சாவு எங்களுக்கு வாழ்வு வழங்கிற்று. நாங்களும் உமது

புகழ்ச்சிக்காகவும் பிறருடைய ஈடேற்றத்திற்காகவும் அயராது உழைத்திட அருள்வீராக. ஆமென்!

ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு – நீர்
அடங்கிய கல்லறை உமதன்று

**14. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.**

**விவிலியச் சிந்தனை (யோவான் 19:41–42)**

அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அங்கே புதிய கல்லறை ஒன்று இருந்தது. அதில் அதுவரை யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. அன்று பாஸ்கா விழாவுக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும் அக்கல்லறை அருகில் இருந்ததாலும் அவர்கள் இயேசுவை அதில் அடக்கம் செய்தார்கள்.

(லூக்கா 23:55–56)

கலிலேயாவிரிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் பின்தொடர்ந்து சென்று கல்லறையைக் கண்டார்கள்; அவருடைய உடலை வைத்த விதத்தைப் பார்த்து விட்டு, திரும்பிப் போய் நறுமணப் பொருள்களையும் நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். கட்டளைப்படி, அவர்கள் ஓய்வு நாளில் ஓய்ந்திருந்தார்கள்.

**லாசரின் சகோதரி மார்த்தாள் வார்த்தைகளில்...**

கல்லறையை மூடிய கல் தான், உன் மகத்தான மனித வாழ்க்கையின் முற்றுபுள்ளியோ? நீ இன்றி இவ்வுலகமே இருள் சூழ்ந்த கல்லறையாய் மாறியதோ?

உன் முகம் காணா கவலையில், கதிரவனும் காலை உதிப்பானோ? எங்கள் கண்களின் கண்ணீர் திரை தான் இனி என்று விலகுமோ? அன்பை விதைத்த உன்னை, வதைத்த இவ்வுலகில், அன்பு தான் தழைக்குமோ? உயிரற்ற என் தமயனை உயிர்ப்பித்த தலைவன் நீ. உன் உயிர் பிரிந்த நொடியில் என் உயிர் பிரியாததும் ஏனோ?

ஆனால்!

உயிர்ப்பும் உயிரும் நானே என்றுரைத்த நாதா! உன் உயிர்ப்பைப் பறைசாற்றும் கருவியாய் நான் மாறும் அருள் தாரும்!

**செபம்:**

அன்பு இயேசுவே!
நாங்கள் எப்போதெல்லாம் உம்மை
வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளாமல்
மறுதலிக்கிறோமோ, அப்போதெல்லாம்
உம்மை கல்லறையில் வைத்து மூடுகிறோம்.
எங்களின் கலங்கிய மனதை குணப்படுத்தியருளும்.
உமது உயிர்த்தெழுதரில் நம்பிக்கை கொண்டு
என்றும் வாழ அருள் புரியும்.

**எல்லாரும்:**

அன்பு இயேசுவே! உமது உடல் கல்லறையில் வைக்கப்பட்டாலும் மண்ணோடு மண்ணாகி அழிந்துபோகவில்லை. நாங்களும் திருமுழுக்கின் வழியாக உம்மோடு கல்லறையில் அடக்கப்பட்டோம். பாவத்திற்கு இறந்தோம். ஆனால், நீர் புத்துயிர் பெற்று எழுந்ததுபோல எங்களுக்கும் ஆன்மீக வாழ்வு அளித்து, புதிய மனிதர்களாக வாழ நீர் வழிசெய்தீர். யாம் பெற்ற வாழ்வு இவ்வையகம் பெற்று மகிழ்ந்திட அருள்வீராக. ஆமென்!

**சிலுவைப் பாதையின் இறுதியில்...**

நம் திருத்தந்தையின் கருத்துக்கள் நிறைவேறும்படி கிறிஸ்து கற்பித்த செபம், மங்கள் வார்த்தை செபம், திருத்துவப் புகழ் சொல்வோம். நம் பாவங்களுக்காக முழுமையாக மனம் வருந்துவோம். நற்கருணை விருந்தில் பங்கேற்போம். இவ்வாறு, இறையருள் துணையால் நம் ஆன்ம நலனுக்காக நாம் பரிபூரண பலன் பெறலாம். அதை இறந்தோருக்காகவும் ஒப்புக்கொடுக்கலாம்.